தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2017

ஆண்டு: 9ம் வகுப்பு திகதி: 25.11.2017

நேரம்: 2 மணி 30 நிமிடங்கள்

ஆசிரியர்கள்: திரு தேவராசா சரவணமுத்து

மாணவர் பெயர்: ---------------------------------------------------

| வினாக்கள் | மொத்தப் புள்ளிகள் | மாணவர் பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| வினா 1 | 10 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 10 | பக்கம் | 1 |
|---|---|---|---|---|---|

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**பின்வரும் சொற்கள் பெயராகவும், வினையாகவும் வருமாறு ஆறு சொற்களுக்குக் குறையாமல் வாக்கியங்கள் எழுதுக.** (10 புள்ளிகள்)

1. படி (பெயர்) :................................................................................

....................................................................................................

படி (வினை) :................................................................................

....................................................................................................

2. மலர் (பெயர்) :................................................................................

....................................................................................................

மலர் (வினை) :................................................................................

....................................................................................................

3. நாடு (பெயர்) :................................................................................

....................................................................................................

நாடு (வினை) :................................................................................

....................................................................................................

4. ஓடு (பெயர்) :................................................................................

....................................................................................................

ஓடு (வினை) :................................................................................

....................................................................................................

5. பெயர் (பெயர்) :................................................................................

....................................................................................................

பெயர் (வினை) :................................................................................

....................................................................................................

6. காய் (பெயர்) :................................................................................

....................................................................................................

காய் (வினை) :................................................................................

....................................................................................................

7. பார் (பெயர்) :..........................................................................................

...............................................................................................................

பார் (வினை) :..........................................................................................

...............................................................................................................

8. இடி (பெயர்) :..........................................................................................

...............................................................................................................

இடி (வினை) :..........................................................................................

...............................................................................................................

|

9. மடி (பெயர்) :..........................................................................................

...............................................................................................................

மடி (வினை) :..........................................................................................

...............................................................................................................

10. ஊர் (பெயர்) :..........................................................................................

...............................................................................................................

ஊர் (வினை) :..........................................................................................

...............................................................................................................

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன் கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

இயல், இசை, நாடகம் என்பன முத்தமிழ் என்று அழைக்கப்படுகின்றன. தமிழில் உரையாக எழுதப்படுபவை அல்லது பேசப்படுபவை இயற்றமிழ் என்றும், இராகத்துடன் பாடப்படுபவை இசைத்தமிழ் என்றும், பல்வேறு பாத்திரங்களை உருவாக்கி நடிக்கப்படுபவை நாடகத்தமிழ் என்றும் கூறப்படுகிறது. எங்கள் கோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் ஒவ்வொரு கலைவிழாவிலும் மூன்று தமிழ்களையும் உள்ளடக்கிய நிகழ்ச்சிகள் இடம் பெறுவது பாராட்டிற்குரியதாகும்.

முத்தமிழில் மூன்றாவதாக இடம் பெற்றிருக்கும் நாடகம் நீண்டகாலமாக தமிழ் மக்களின் மத்தியில் செல்வாக்குடன் திகழ்கிறது. "பரந்ததொரு உலகை மேடை என்னும் வரம்பிற்குள் காட்டுகின்ற சக்திமிக்க கலையே நாடகமாகும்." உதாரணமாக பரந்து விரிந்த சோழப்பேரசை பகாய் அரங்கத்தில் அமைந்துள்ள மேடையில் வீரத்தின் சிகரங்கள் நாடகத்தில் காட்டினார்கள். சமூக நாடகம், புராண நாடகம், இதிகாச நாடகம், வரலாற்று நாடகம் எனப் பலவகை நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன. மக்கள் வாழ்கின்ற சமூகத்தில் (சமுதாயத்தில்) நடைபெறும் நிகழ்வுகளை நாடகமாக எழுதி நடிப்பவை சமூக நாடகங்களாகும். புராணக் கதைகளை நாடகமாக எழுதி நடிப்பவை புராண நாடகங்களாகும். அரிச்சந்திரன் நாடகம், சூரபதுமன் நாடகம் என்பன இதற்கு உதாரணங்களாகும். இதிகாசக் கதைகளைள நாடகமாக எழுதி நடிப்பவை இதிகாச நாடகங்களாகும். மகாபாரத நாடகம், இராமாயண நாடகம் என்பன இதற்கு உதாரணங்களாகும். வரலாற்று நிகழ்வுகளை நாடகமாக எழுதி நடிப்பவை வரலாற்று (சரித்திர) நாடகங்களாகும். எல்லாளன் நாடகம், வீரபாண்டிய கட்டப்பொம்மன் நாடகம் என்பன இதற்கு உதாரணங்களாகும்.

கூத்துகளிலிருந்தே நாடகங்கள் தோன்றின. பாத்திரங்கள் பாடி, ஆடி, வசனம் பேசி நடித்தவைகள் கூத்துகள் என்று அழைக்கப்பட்டன. இருள் சூழத்தொடங்க ஆரம்பமான கூத்துகள் மறுநாள் விடியும் வரை நடைபெற்றன. முற்காலத்தில் மக்களுக்கு ஓய்வு நேரம் அதிகமாக இருந்தமையால் இரவிரவாக நடைபெறும் கூத்துகளை மக்கள் கண்விழித்து விரும்பிப் பார்த்தனர். காலப் போக்கில் மக்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரம் குறைந்து கொண்டு போனது. இதனால் ஓரிரு மணித்தியாலங்களில் முடிந்துவிடுகின்ற நாடகங்கள் உருவாகின. நாடகங்களுக்குத் தாயாக கூத்துகள் அமைந்தது போல தமிழ்த் திரைப்படங்களுக்குத் தாயாக தமிழ் நாடகங்கள் அமைந்தன.

1. முத்தமிழில் அடங்கும் மூன்றும் எவை?

   ..........................................................................................................

   ..........................................................................................................

(2 புள்ளிகள்)

2. கோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தின் ஒவ்வொரு கலைவிழாவிலும் முத்தமிழ் நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

(6 புள்ளிகள்)

3. நாடகம் என்றால் என்ன?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

(2 புள்ளிகள்)

4.

| நாடகம் | கூறுகின்ற விடயம் | பார்ப்பதனால் ஏற்படும் நன்மை |
|---|---|---|
| சமூக நாடகம் | | |
| புராண நாடகம் | | |
| இதிகாச நாடகம் | | |
| வரலாற்று நாடகம் | | |

(8 புள்ளிகள்)

5. முற்காலத்தில் மக்களால் விரும்பிப் பார்க்கப்பட்ட கூத்துகள் காலப்போக்கில் அழிந்து போனமைக்கான காரணம் யாது?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

(2 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தொடர் வாக்கியத்திலிருந்து 15 தனிவாக்கியங்களைத் தெரிவு செய்து எழுதுக.**

(15 புள்ளிகள்)

இலக்கியாவும், இலக்கணாவும் மிகவும் நெருக்கமான தோழிகளாக இருந்தமையால் ஒருவர் மீது ஒருவர் அளவு கடந்த அன்பு கொண்டிருந்து ஒருவர் துன்பம் அடைந்தவேளையில் மற்றவர் ஆறுதல் கூறி இன்பத்தில் மட்டுமல்லாமல் துன்பத்திலும் பங்கு கொண்டு வாழ்ந்த வேளையில் எல்லோரும் அவர்களின் தூய்மையான நட்பைப்பார்த்து வியந்தபோது காவியா என்ற புதிய மாணவியின் வருகையினால் அவர்களுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டு இருவரும் ஒருவரோடொருவர் பேசாமல் இருப்பதை வகுப்பு ஆசிரியை அவதானித்தபின்பு நகமும், சதையும் போல இருந்த இவர்கள் இப்படி ஆகிவிட்டார்களே என்று கவலையடைந்தமையால் இருவரையும் அழைத்துப்பேசி அவர்களின் பிரிவுக்குரிய காரணத்தைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்கியவுடன் இருவரும் ஒருவரையொருவர் கட்டியணைத்து ஒருவரின் கண்ணீரை மற்றவர் துடைத்த பிறகு எப்பொழுதும் ஒற்றுமையாக இணைபிரியாது வாழ்ந்தார்கள்.

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் விடயத்தை 70 சொற்களுக்குக் குறையாமல் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.**

(15 புள்ளிகள்)

எனது தாத்தாவும், பாட்டியும் இலங்கையில் உள்ள வன்னியில் வசிக்கின்றார்கள். கடந்த மார்கழி விடுமுறையில் அவர்களைப் பார்ப்பதற்காக நானும், அப்பாவும், அம்மாவும் வன்னிக்குச் சென்றோம். தாத்தா எங்களை பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்றார். பாட்டி சுவையான உணவு வகைகளைச் சமைத்துத்தந்தார். உறவினர்கள் எங்களைப் பார்ப்பதற்காக வந்தார்கள். நாங்கள் பல உறவினர்களின் வீடுகளுக்குச் சென்றோம். இவ்வாறு ஆனந்தமாக எமது பொழுதுகள் கழிந்தன. ஒருநாள் அடர்ந்த காட்டைப் பார்க்க ஆசையாக இருக்கின்றது, அழைத்துச் செல்வீர்களா? என்று தாத்தாவிடம் கேட்டேன். ஆபத்துகள் நிறைந்த யானைக்காடு வேண்டாம் என்று தாத்தா மறுத்தார். நான் அடம் பிடித்தேன். இறுதியில் தாத்தா சம்மதித்தார். பச்சைப் பசேலென உயர்ந்து வளர்ந்திருந்த மரங்கள், அந்த மரங்களில் உட்கார்ந்து பழங்களை உண்கின்ற பறவைகள், துள்ளி ஓடும் புள்ளிமான்கள் என்பவற்றை ரசித்தவாறு நடந்தோம். அப்போது காடே அதிருமாறு யானையின் பிளிறல் சத்தம் கேட்டது. நாங்கள் ஒரு மரத்தின் பின்னால் மறைந்து நின்று பார்த்தோம். யானை தனது தும்பிக்கையால் மரங்களைப் பிடுங்கி வீசியது. எங்களைக் கண்ட யானை எங்களை நோக்கி ஓடி வந்தது.

.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................
.....................................................................................................

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

- உங்கள் அம்மாவின் தாய், தந்தையர் உங்களுடன் சிட்னியில் வாழ்கின்றனர்.
- அதேவேளையில் உங்கள் அப்பாவின் தாய், தந்தையர் உங்களின் தாய்நாட்டில் வயது முதிர்ந்த காலத்தில் தனிமையில் வாழ்கின்றார்கள்.
- சிட்னியில் நிலவுகின்ற கடும் வெய்யில், கடும் குளிர் என்பன தங்களின் உடல் நிலையைப் பாதிக்கும் என்று அவர்கள் அச்சப்படுகிறார்கள்.
- சிட்னிக்கு வந்தால் எப்பொழுதும் வீட்டிற்குள் அடைபட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணுகின்றார்கள்.
- காலாகாலமாக வாழ்ந்த வீட்டையும், நாட்டையும் நிரந்தரமாகப் பிரந்து விடுவோமே என்ற சந்தேகமும் அவர்களுக்கு உள்ளது.

**மேலே உள்ள தகவல்களை அடிப்டையாக வைத்து சிட்னிக்கு வந்தால் அவர்களை எவ்வாறு மகிழ்ச்சியாக வாழவைப்பீர்கள் என்பதை விளக்கி உங்களின் அப்பாவின் தாய், தந்தை இருவருக்கும் 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.** (15 புள்ளிகள்)

.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................
.....................................................................................................................

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

**பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

(20 புள்ளிகள்)

1. மக்கள் கண்கவர் இடங்களைக் காண்பதற்காகவும், வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடங்களைப் பார்த்து மகிழ்வதற்காதகவும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சுற்றுலாக்களை மேற்கொள்கின்றார்கள். “மறக்க முடியாத சுற்றுலா” என்ற தலையங்கத்தில் நீங்கள் மேற்கொண்ட சுற்றுலா பற்றிக் கட்டுரை எழுதுக.

2. ஒரு மிதிவண்டியின் சுயசரிதை

3. வீட்டையும், நாட்டையும் சுத்தமாக வைத்திருப்பது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். அவற்றைச் சுத்தமாக வைத்திருப்பதனால் பல நன்மைகள் ஏற்படும். மாறாக அசுத்தமாக வைத்திருந்தால் பல தீமைகள் ஏற்படும். “சுத்தம் சுகம் தரும்” என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை சிட்னியில் வெளிவருகின்ற தென்றல் சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக எழுதுக.

........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................